# திருநெல்வேலி மாநகராட்சி

## 2021ம் ஆண்டு மே மாதம் 31ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

1) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 7 மீனாட்சிபுரத்தில் மேலவீரராகவபுரம் மாநகராட்சி துவக்கப்பள்ளி அமைந்துள்ளது. மேற்கண்ட துவக்கப் பள்ளிக் கட்டிடத்தின், தலைமை ஆசிரியர் அவர்களின் அறை மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் கசிவு ஏற்பட்டு, மேற்கூரை பூச்சிகள் (Ceiling Plastering) உடைந்து கீழே விழுகிறது. மேலும் மேற்கண்ட பள்ளி கட்டிடத்தில் சட்டமன்ற தேர்தலுக்காக வாக்கு சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பள்ளி கட்டிடத்தை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் கடிதம் மூலம் கோரிக்கை செய்துள்ளார்கள். மேற்படி கோரிக்கையின் அடிப்படையில் பராமரிப்பு பணியை மேற்கொள்ள ரூ.1.15 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பள்ளி கட்டிடத்தில் சட்டமன்ற தேர்தலுக்காக வாக்கு சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாலும், பள்ளிக் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு, மேற்படி பராமரிப்பு பணிகளை உடனடியாக போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்க வேண்டிய அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைபுள்ளிகள், பெற்று மேற்படி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலை புள்ளிகளின் விபரம்.

1. திரு. P. மணிகண்டராஜா,
   10-B, அழகப்பபுரம் தெற்கு தெரு,
   பழைய பேட்டை, திருநெல்வேலி. - மதிப்பீட்டை விட 0.5% குறைவாக
2. திரு. R. குமார்,
   26, பாபா தெரு,
   திருநெல்வேலி டவுன். - மதிப்பீட்டை விட 1% அதிகமாக
3. திரு. P. நெல்சன்,
   162/1, நாடார் தெரு, மணிமூர்த்தீஸ்வரம்
   திருநெல்வேலி - மதிப்பீட்டை விட 1.5% அதிகமாக

மேற்கண்ட பணி தேர்தல் பணியாக இருப்பதாலும், பள்ளிக் குழந்தைகளின் நலன்களை கருத்தில் கொண்டும், மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1,15,000/- ஆகும். எனவே, பள்ளிக்குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு, மேற்கண்ட மாநகராட்சி ஆரம்ப பள்ளி கட்டிடத்தின் பராமரிப்பு பணியை மேற்கொள்ளவும், மேலும் மேற்படி பணி தேர்தல் பணியாக இருப்பதால் போர்க்கால அடிப்படையில் பணி மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை புள்ளியான மதிப்பீட்டைவிட 0.5% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.P.மணிகண்டராஜா அவர்களின் விலைப்புள்ளியை அங்கீகரித்து, மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.1,15,000/-க்கு நிர்வாக அனுமதியும், தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற பொருட்ச்சீட்டு வரைவு ஒப்புதலுக்கும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட துவக்கப் பள்ளிக் கட்டடத்தின், தலைமை ஆசிரியர் அவர்களின் அறை மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் கசிவு ஏற்பட்டு, மேற்கூரை பூச்சிகள் (Ceiling Plastering) உடைந்து கீழே விழுகிறது. மேலும் மேற்கண்ட பள்ளி கட்டிடத்தில் சட்டமன்ற தேர்தலுக்காக வாக்கு சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பள்ளி கட்டிடத்தை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் கடிதம் மூலம் கோரிக்கை செய்துள்ளார்கள். மேற்கண்ட கோரிக்கையின் அடிப்படையில், மேற்படி பள்ளி கட்டிடத்தின் மேற்கூரையின் Ceiling பூச்சு வேலை செய்யவும் மற்றும் பராமரிப்பு பணி செய்து, Painting (White Washing) அடிக்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.1.15 லட்சத்துக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி தேர்தல் பணியாக இருப்பதாலும், பள்ளிக் குழந்தைகளின் நலன்களை கருத்தில் கொண்டும், மேற்படி பணியை மேற்கொள்ள

தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.15 லட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணி தேர்தல் பணியாக இருப்பதால், பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் மதிப்பீட்டைவிட 0.5% குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.P.மணிகண்டராஜா அவர்களுக்கு வேலை ஆணை வழங்க மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 3:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 102/2020-21-தச்சை)

---

2) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண்: 9, வண்ணாரப்பேட்டை சாலைத் தெருவில் வெற்றிவேலடி விநாயகர் கோவில் தெரு அருகில் அமைந்துள்ள இந்து சமய அறநிலைத்துறையை சார்ந்த, அருள்மிகு வெற்றிவேலடி விநாயகர் கோவிலுக்கு சொந்தமான கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் மாத வாடகை ரூ.300/-க்கு மாநகராட்சி பழைய ஆரம்ப பள்ளி கட்டிடம் நடைபெற்று வருகிறது. மேலும் தேர்தல் சமயங்களில் மேற்படி கட்டிடம் தேர்தல் வாக்குச்சாவடியாக பயன்படுத்தப்பட்டும் வருகிறது. மேற்கண்ட கட்டிடம் சுமார் 75 ஆண்டுகளுக்கு மேல் உள்ள ஓடு போட்ட பழைய கட்டிடமாகும் தற்போது மேற்கண்ட கட்டிடம் மிகவும் பழுதடைந்து கூரை ஓடுகள் சேதமடைந்து, மழைக்காலங்களில் வகுப்பறைகளை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்கண்ட கட்டிட நிர்வாகம் குறைந்த வாடகைக்கு நடத்திவருவதால், தங்களால் பராமரிப்பு பணி மேற்கொள்ள நிதி உதவி இல்லை எனக் கூறிவருகிறார்கள். தற்போது மேற்படி கட்டிடம் தேர்தலுக்காக வாக்குச்சாவடி எண் 33 மற்றும் 34 என்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வாக்குச்சாவடியை 15.02.2021 அன்று ஆணையாளர் அவர்கள், உதவி ஆணையாளர் அவர்கள், வட்டாட்சியர் அவர்கள் மற்றும் துணை வட்டாட்சியர் அவர்கள் ஆகியோர் வாக்குச்சாவடி ஆய்வு செய்த போது, மேற்படி கட்டிடத்தின் வடபகுதி வாக்குச்சாவடி எண் 34 கட்டிடத்தில் சேதமடைந்துள்ள பழைய ஓடுகளை முற்றிலும் அகற்றிவிட்டு A.C. Sheet அமைத்து, கட்டிடத்தின் முன்பக்க பழைய தகர கதவை அகற்றிவிட்டு, M.S. Door அமைத்து, பராமரிப்பு பணி மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் கட்டிட நிர்வாகம், அறங்காவலர் குழு தலைவர் அவர்களின் கடிதத்தின்படி, தங்கள் திருக்கோயில் நிர்வாகம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள வசதி இல்லாததால், மாநகராட்சி மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தங்கள் கோவில் நிர்வாகத்திற்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள். எனவே, மேற்படி கட்டிடத்தை, ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.1.40 லட்சத்துக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி தேர்தல் பணியாக இருப்பதாலும், பள்ளிக் குழந்தைகளின் நலன்களை கருத்தில் கொண்டும், மேற்படி பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.40 லட்சத்தில் நிர்வாக அனுமதி வேண்டியும், மேற்படி பணி தேர்தல் பணியாக இருப்பதால் தேர்தல் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைபுள்ளிகள், பெற்று மேற்படி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலை புள்ளிகளின் விபரம்.

1. திரு. M.D. டேவிட்,
   17/4 செண்பகம் பிள்ளை சிங்கில் தெரு,
   திருநெல்வேலி டவுண் 627 006. - மதிப்பீட்டை விட 0.5% குறைவாக

2. திரு.R.மகாலெட்சுமி,
   21, நெல்லை நாயனார் தெரு,
   பாளையங்கோட்டை. - மதிப்பீட்டு தொகைக்கு செய்கிறேன்.

3. திருமதி. G. சரஸ்வதி,
   15, முதல் குறுக்குத் தெரு,
   காமராஜ்நகர், பாளையங்கோட்டை. - மதிப்பீட்டை விட 0.1% அதிகமாக

மேற்கண்ட பணி தேர்தல் பணியாக இருப்பதாலும், பள்ளிக் குழந்தைகளின் நலன்களை கருத்தில் கொண்டும், மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக பராமரிப்பு பணியை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1,40,000/- ஆகும். எனவே, பள்ளிக் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு, மாநகராட்சி பழைய ஆரம்ப பள்ளி கட்டிடத்தினை பராமரிப்பு பணியை மேற்கொள்ளவும், மேலும் மேற்படி பணி தேர்தல் பணியாக இருப்பதால் போர்க்கால அடிப்படையில் பணி மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை புள்ளியான மதிப்பீட்டை விட 0.5% குறைவாக கொடுத்துள்ள திரு.M.D.டேவிட் அவர்களின் விலைப்புள்ளியை அங்கீகரித்து, மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.1,40,000/-க்கு நிர்வாக அனுமதியும், தமிழ்நாடு மாநகராட்சிகள் 1994-ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற பொருட்ச்சீட்டு வரைவு ஒப்புதலுக்கும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட மாநகராட்சி பள்ளிக்கட்டிடத்திலுள்ள வாக்குச்சாவடியை 15.02.2021 அன்று ஆணையாளர் அவர்கள், உதவி ஆணையாளர் அவர்கள், வட்டாட்சியர் அவர்கள் மற்றும் துணை வட்டாட்சியர் அவர்கள் ஆகியோர் வாக்குச்சாவடி ஆய்வு செய்த போது, மேற்படி கட்டிடத்தின் வடபகுதி வாக்குச்சாவடி எண் 34 கட்டிடத்தின் மேற்கூரை ஓடு மிகவும் பழுதடைந்து சேதமடைந்துள்ளது. மேற்படி சேதமடைந்துள்ள பழைய ஓடுகளை முற்றிலும் அகற்றிவிட்டு A.C. Sheet அமைத்து, கட்டிடத்தின் முன்பக்க பழைய தகர கதவை அகற்றிவிட்டு, M.S. Door அமைத்து, பராமரிப்பு பணி மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். மேற்கண்ட ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.1.40 லட்சத்துக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி தேர்தல் பணியாக இருப்பதாலும், பள்ளிக் குழந்தைகளின் நலன்களை கருத்தில் கொண்டும், மேற்படி பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.40 லட்சத்துக்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணி தேர்தல் பணியாக இருப்பதால், பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் மதிப்பீட்டை விட 0.5% குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.M.D.டேவிட் அவர்களுக்கு வேலை ஆணை வழங்க மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 4:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 84/2020-21-தச்சை)

---

3) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண்: 1 முதல் 10 மற்றும் 39 ஆகிய வார்டு பகுதிகளில், பாளை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 55 வாக்குச்சாவடிகள் அமைந்துள்ளன. மேற்படி வாக்குச்சாவடியில், வாக்குச்சாவடி எண் 5-யினை மாதிரி வாக்குச் சாவடியாக அமைக்க ஆணையாளர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் வாக்குச் சாவடியை ஆணையாளர் அவர்கள் ஸ்தல ஆய்வு மேற்கொண்ட பொழுது வெளிப்பகுதியில் வெயில் அதிகமாக இருப்பதால் வாக்காளர்கள் நிற்கும் பகுதியில் சாமியான பந்தல் அமைத்தும் மற்றும் வாக்காளர்கள் வரிசையில் நிற்காதபடி உட்காரும் வகையில் வெளிப்பகுதியில் வரிசையாக சேர் போடவும் அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் வாக்குச் சாவடியை செயற்பொறியாளர் அவர்கள் ஸ்தல ஆய்வு மேற்கொண்ட பொழுது வாக்குச்சாவடியில் கூடுதல் வெளிச்சம் ஏற்படுத்தும் வகையில் அமைக்கவும் அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே, மேற்படி மாதிரி வாக்குச் சாவடியை அமைக்க கீழ்க்கண்ட பணிகள் செய்திட வேண்டியுள்ளது.

1. வாக்குப்பதிவு அலுவலர் I, II, III மற்றும் வாக்குப்பதிவு தலைமை அலுவலர் வாக்குச்சாவடி முகவர்கள் ஆகியோர் அமரும் இருக்கைகள் மற்றும் மேஜைகளை shining cloth கொண்டு covering செய்திடவும். மற்றும் ஒவ்வொரு மேடைகளிலும் பெயர் பலகை (Polling officer I, II, III & Presiding officer, Voting compartment, Booth Agent) வைத்திடவும்,

2. வாக்குச்சாவடியின் உள்பகுதியில் நான்கு பக்க சுவர்களிலும் Decorative Screen அமைத்து, Voting Compartment பகுதியை தனியாக பிரித்துக் காட்டும் வகையில் Serial set, Decorative arrangement
3. தரையில் சிகப்பு கம்பளம் விரிக்கப்பட்டு மற்றும் Balloon Decorative செய்திடவும்
4. Entrance, Exit Box Arch Main Entrance flex Arch frame.

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ரூ.55,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் தேர்தல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்க வேண்டி உள்ளதால், உள்ளூர் விலைபுள்ளிகள், பெற்று மேற்படி பணிகளை மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலை புள்ளிகளின் விவரம்.

1. M.J. இன்டஸ்ட்ரீஸ்,
   42, நாராயண சுவாமி கோவில் தெரு,
   பேட்டை, திருநெல்வேலி — 627004. - 0.75% Above
2. ஜார்ஜ் இன்ஜினியரின் என்டர்பிரைசஸ்,
   182-R/9, எஸ்.என் ஹைரோடுஇ
   திருநெல்வேலி — 627001. - 0.50% Below
3. பிரகாஷ் இன்டஸ்ட்ரீஸ்,
   100, நைனார்குளம் ரோடு,
   திருநெல்வேலி — 627006. - 0.50% Above

மேற்கண்ட பணி 2021 சட்டமன்ற பொதுத்தேர்தல் பணியாக இருப்பதால், தேர்தல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு உடனடியாக பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.55,000/-க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணி தேர்தல் பணியாக இருப்பதால் போர்க்கால அடிப்படையில் பணி மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை புள்ளியான மதிப்பீட்டை விட 0.75% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜார்ஜ் இன்ஜினியரின் என்டர்பிரைசஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரித்து, தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற பொருட்ச்சீட்டு வரைவு ஒப்புதலுக்கும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 1 முதல் 10 மற்றும் 39 ஆகிய வார்டு பகுதிகளில், பாளை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 55 வாக்குச்சாவடிகள் அமைந்துள்ளன. மேற்படி வாக்குச்சாவடியில், வாக்குச்சாவடி எண் 5-யினை மாதிரி வாக்குச் சாவடியாக அமைக்க ஆணையாளர் அவர்களால் உத்தரவிட்டுள்ளது. எனவே, மேற்படி மாதிரி வாக்குச் சாவடியை அமைக்க ரூ.55,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தேர்தல் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.55,000/-க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணி தேர்தல் பணியாக இருப்பதால், பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் மதிப்பீட்டை விட 0.50% குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜார்ஜ் இன்ஜினியரின் என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கவும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 5:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 106/2020-21-தச்சை)

---

4) 2021 சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு 05.04.2021 அன்று பாளை காவல் உதவி ஆணையாளர் அவர்கள், பாளை காவல் ஆய்வாளர் அவர்கள், வட்டாட்சியர், பாளையங்கோட்டை அவர்கள் ஆகியோர் வாக்குச்சாவடியினை ஸ்தல ஆய்வு

செய்த போது, பாளை சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடிகளுக்கு பதற்றமான நிலையில் உள்ள வாக்குச்சாவடிகளான அறிஞர் அண்ணா தொடக்கப்பள்ளி, சிந்துபூந்துறை Oxford தொடக்கப்பள்ளி, ம.தி.தா.இந்து மேல் நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் அதிக காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளதால், கூடுதல் சாமியான பந்தல் மற்றும் மின் விளக்கு வசதி குடிநீர் வசதி மற்றும் Focus Light வசதி செய்து கொடுக்கும்படியும் மற்றும் Oxford தொடக்கப்பள்ளி பதற்றமான சூழல் மிகுந்த வாக்குச்சாவடி என்பதால் போதுமான பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. எனவே, வாக்குச்சாவடி எண் 3 மற்றும் 4 இடையில் தனித்தனியாக மறைப்பு (Partition) ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும், மேலும் ம.தி.தா.இந்து மேல்நிலைப் பள்ளி வாக்குச் சாவடிக்கு கூடுதல் Power Plug Point வசதி செய்து கொடுக்கவும் மற்றும் வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு நடவடிக்கையாக மறைப்பு (Partition) அமைத்தும் கொடுக்க காவல்துறை மற்றும் வட்டாட்சியர் ஆகியோரின் அறிவுறுத்தியதின் படி கீழ்கண்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டியுள்ளது.

| Sl. No. | Name of Basic Amenities | Qnty. | Sl. No. | Name of Basic Amenities | Qnty. |
|---|---|---|---|---|---|
| 1. | Long Steel Table | 46 nos | 6. | Plug point | 8 nos |
| 2. | Chair | 181 nos | 7. | Samiyana | 2080 sq.ft. |
| 3. | Water can | 108 nos | 8. | Focus Light | 4 nos |
| 4. | Pedestal fan | 10 nos | 9. | Partition | 542sq.ft. |
| 5. | Tube Light | 108 nos | 10. | Water Storage Drum | 4 nos |

எனவே, 2021 சட்டமன்ற பொதுத்தேர்தல் அவசர அவசியத்தை முன்னிட்டும், பொதுமக்கள் மற்றும் வாக்குச் சாவடிகளில் பணிபுரியும் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மேற்கண்ட அடிப்படை வசதிகளை செய்திட உத்தேச செலவினம் ரூ.1,57,000/- ஆகும். எனவே, மேற்கண்ட தேர்தல் பணியில் அவசர அவசியத்தை கருதி, பணியை மேற்கொள்ள மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.1,57,000/-க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணி தேர்தல் பணியாக இருப்பதால், பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ள வேலை ஆணை வழங்க மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 6:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 104/2020-21-தச்சை)

---

5) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோயின் இரண்டாம் அலை மிக அதிகமாக பரவி வருவதால் 04.05.2021 அன்று ஆணையாளர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்த, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் மாஸ்க் அணிவதின் முக்கியத்துவம் மற்றும் சமூக இடைவெளி போன்ற கொரோனா வைரஸ் தொற்று நோய் விழிப்புணர்வு ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்திட, ஒலிபெருக்கி அமைப்புகளை பொருத்த வேண்டியுள்ளது. மேலும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்க வேண்டிய அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைபுள்ளிகள், பெற்று மேற்படி பணியை மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலை புள்ளிகளின் விபரம்.

1. திருமதி. V. பார்வதி,
   66, ராஜாஜி தெரு,
   பத்தமடை, திருநெல்வேலி. - மதிப்பீட்டை விட 0.5% குறைவாக
2. திரு. S. செல்வம்,
   17, வரதராஜபுரம் தெரு,
   திருநெல்வேலி —— 627001. - மதிப்பீட்டை விட 1% அதிகமாக

3. திரு. P. மணிகண்டராஜா,
   10-B, அழகப்பபுரம் தெற்கு தெரு,
   பழைய பேட்டை, திருநெல்வேலி. - மதிப்பீட்டு தொகைக்கு

மேற்கண்ட பணி COVID-19 தடுப்பு பணி என்பதால் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு, மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக மேற்கொள்ள செலவினம் தொகை ரூ.2,01,000/- ஆகும். எனவே, பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு, மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பிட்டு தொகை ரூ.2,01,000/-க்கு நிர்வாக அனுமதியும் மேலும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியான மதிப்பீட்டை விட 0.5% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி.A.பார்வதி கொடுத்துள்ள விலைப்புள்ளியை அங்கீகரிக்கவும், தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று நோயின் இரண்டாம் அலை மிக அதிகமாக பரவி வருவதால் 04.05.2021 அன்று ஆணையாளர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்த, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில், மாஸ்க் அணிவதின் முக்கியத்துவம் மற்றும் சமூக இடைவெளி போன்ற கொரோனா வைரஸ் தொற்று நோய் விழிப்புணர்வு ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்திட ஒலிபெருக்கி அமைப்புகளை பொருத்த வேண்டியுள்ளது. எனவே கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மேற்படி பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.01 லட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணி COVID-19 தடுப்பு பணியாக இருப்பதால், பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் மதிப்பீட்டைவிட 0.5% குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி.V.பார்வதி அவர்களுக்கு வேலை ஆணை வழங்கியதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 7:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 2/2020-21-தச்சை)

---

6) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல வார்டு எண் 5, 6 மற்றும் 7 பகுதிகளில் 10.11.2020 முதல் 12.11.2020 மற்றும் 16.11.2020, 17.11.2020 மற்றும் 18.11.2020 ஆகிய தினங்களில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக பெய்த, கனமழையின் காரணமாக மேற்கண்ட பகுதிகளின் சாலைகள் சேதம் அடைந்து ஆங்காங்கே குண்டும், குழியுமாக ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்படி சாலையானது மக்கள் நடமாட்டம் மற்றும் இருசக்கர வாகனம், நான்கு சக்கர வாகனம் மற்றும் பேருந்துகள் முதலியன அதிகமாக பயன்படுத்தப்படும் சாலையாகும். மேற்படி சாலையில் கனமழையின் காரணமாக மழைநீர் தேங்கி பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேற்படி சாலையில் ஏற்பட்டுள்ள குண்டு, குழியினால் வாகன விபத்துக்களும் ஏற்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் நலனை கருத்தில் கொண்டு பார்வை (1)-ல் கண்டுள்ளபடி ஆணையாளர் அவர்கள் மேற்படி சாலைகளில் செங்கல் கப்பிகளைக் (Debris) கொண்டு உடனடியாக செப்பனிட உத்தரவிட்டுள்ளார்கள்.

மேற்கண்ட உத்தரவின்படி திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டல பகுதிக்குட்பட்ட காமராஜர் நகர் மற்றும் சிவன் கோவில் பகுதிகளில் (9 கி.மீ. அப்பால்) இடிக்கப்பட்ட கட்டுமான செங்கற்களை இரண்டு JCB இயந்திரம் (ஒரு JCB இயந்திரம் மூலம் Debris-களை லாரிகளில் ஏற்றி விடவும் மற்றும் மற்றொரு JCB இயந்திரம் மூலம் லாரிகளினால் கொண்டுவரப்பட்ட

Debris-களை சாலையில் மட்டப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டுள்ளது) மற்றும் நான்கு லாரிகள், Hydraulic Vibrator Roller இயந்திரம் மற்றும் கூலி ஆட்கள் கொண்டு இரண்டு தினங்கள் மற்றும் மூன்றாம் நாள் 2 மணி நேரம் மொத்தம் 18 மணி நேரம் மேற்கண்ட செங்கல் கப்பிகள் (Debris) கொண்டு மேற்படி சாலைகளில் குண்டும் குழியுமான பகுதிகளில் சமதளபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட உத்தரவின்படி, மேற்படி பணிகளை மேற்கொள்ள பொதுப் பணித்துறை மற்றும் குடிநீர் வாரியம் விலை பட்டியியலில் விலை விகிதம் இல்லாததால் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலை புள்ளிகளின் விபரம்.

| வ. எண் | விலைப்புள்ளி வழங்கியவர்கள் | JCB ஒரு மணி நேரத் திற்கு | Lorry நாள் ஒன் றுக்கு | Roller ஒரு மணி நேரத் திற்கு | Labour ஒரு நபருக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | T. Balasubramanian 214/1, Poonthotam Street, Sankar Nagar-627-357 | 850/- | 7,500/- | 1,300/- | 800/- | 10450/- |
| 2 | Karuppasamy Earth Movers 220, Thirumal Nagar, NGO A Colony, Tirunelveli 627007 | 890/- | 7,800/- | 1,500/- | 850/- | 11040/- |
| 3 | Mayil Agencies, 255, Madurai Road, Sankar Nagar,627-357 | 940/- | 8,000/- | 1,450/- | 850/- | 11240/- |

மேற்படி பெறப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.T.பாலசுப்ரமணியன் அவர்களின் விலை புள்ளியை அங்கீகரிக்கலாம். மேற்படி பணியை இரண்டு தினங்கள் மற்றும் மூன்றாம் நாள் (2மணி நேரம்) மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.1,32,300/- ஆகும்.

எனவே, வடகிழக்கு பருவமழையின் காரணமாக பெய்த கனமழையினால் சேதமடைந்த சாலைகளை பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டும், வாகன விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு மாநகராட்சிகள் 1994ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திரு.T.பாலசுப்ரமணியன் அவர்களுக்கு வேலை ஆணை வழங்கியதை மாமன்ற பின்னேற்பு அனுமதிக்காக வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சை மண்டலம், வார்டு எண் 5, 6 மற்றும் 7 பகுதிகளுக்கு உட்பட்ட சாலைகள் வடகிழக்கு பருவ மழையின் காரணமாக பெய்த கன மழையினால் மேற்படி சாலைகள் சேதமடைந்த குண்டும், குழியுமாக பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல முடியாமல் விபத்துகள் ஏற்படும் வகையிலும் இருந்ததால் மேற்படி சாலைகளை Debris கொண்டு சமதளபடுத்திட JCB, LORRY, HYDRAULIC ROAD ROLLER மற்றும் கூலியாட்கள் கொண்டு பணி மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T.பாலசுப்ரமணியன் அவர்களின் விலைப்புள்ளியை அங்கீகரித்தும், குறைந்த விலைப்புள்ளி அடிப்படையில் இரண்டு தினங்கள் மற்றும் மூன்றாம் நாள் 2 மணி நேரம் மொத்தம் 18 மணி நேரம் பணி மேற்கொள்ள ரூ.1,32,300/-க்கான மதிப்பீட்டு தொகைக்கு நிர்வாக அனுமதியும் மற்றும் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, வாகன விபத்துகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், வடகிழக்கு பருவமழையின்

காரணமாக மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திரு.T.பாலசுப்ரமணியன் அவர்களுக்கு வேலை ஆணை வழங்கியதை மாமன்ற பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 8:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 57/2020-21-தச்சை)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோயின் இரண்டாம் அலை மிக அதிகமாக பரவி வருவதால் 04.05.2021 அன்று ஆணையாளர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்த பல்வேறு அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள். மேலும் உதவி ஆணையாளர், தச்சநல்லூர் மண்டலம் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்: சி2/1194/2021 நாள்: 22.04.2021 படி COVID-19 நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த மண்டல அலுவலர்களுக்கு, பொறுப்பு அலுவலராக நிர்ணயம் செய்து ஆணையிட்டுள்ளார்கள். மேற்படி ஆணைக்கிணங்க மேற்கண்ட பணியை போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்க வேண்டிய அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைபுள்ளிகள், பெற்று மேற்படி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலை புள்ளிகளின் விபரம்.

| வ. எண் | விலைப்புள்ளி வழங்கியவர்கள் | 20” சாலைகளில் தடுப்பு ஏற்படுத்திட | | 15” சாலைகளில் தடுப்பு ஏற்படுத்திட | | 10” சாலைகளில் தடுப்பு ஏற்படுத்திட | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மண் சாலை | C.C/ B.T சாலை | மண் சாலை | C.C/ B.T சாலை | மண் சாலை | C.C B.T சாலை |
| 1 | திரு.R.குமார், 26, பாபா தெரு, திருநெல்வேலி டவுன். | 890/- | 1352/- | 820/- | 1128/- | 630/- | 938/- |
| 2 | திரு.P. மணிகண்டராஜா, 10-B, அழகப்பபுரம் தெற்கு தெரு, பழைய பேட்டை, திருநெல்வேலி. | 920/- | 1410/- | 890/- | 1185/- | 680/- | 990/- |
| 3 | திருமதி.V. பார்வதி, 66, ராஜாஜி தெரு, பத்தமடை, திருநெல்வேலி. | 910/- | 1430/- | 860/- | 1200/- | 690/- | 1080/- |

மேற்கண்ட பணி COVID-19 தடுப்பு பணி என்பதால் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு, மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக மேற்கொள்ள செலவினம் தொகை ரூ.49,975/- ஆகும். எனவே, பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு, மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பிட்டு தொகை ரூ.49,975/-க்கு நிர்வாக அனுமதியும் மேலும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.R.குமார் அவர்கள் கொடுத்துள்ள விலைப்புள்ளியை அங்கீகரிக்கவும், தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று நோயின் இரண்டாம் அலை மிக அதிகமாக பரவி வருவதால் 04.05.2021 அன்று ஆணையாளர் அவர்கள் ஆய்வுக்

கூட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்த பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் உதவி ஆணையாளர், தச்சநல்லூர் மண்டலம் அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி COVID-19 நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த Containment பகுதிகளில் சவுக்கு கம்புகளால் தடுப்பு அமைத்தல் மற்றும் Containment காலம் நிறைவுற்ற பின் மேற்படி தடுப்புகளை அகற்றுதல், தொடர்பான பணிகள் மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள். எனவே கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணியின் முக்கியத்துவத்தை கருதியும், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும் மேற்படி பணியை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.49,975/-க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணி COVID-19 தடுப்பு பணியாக இருப்பதால், பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடாந்திய சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.R.குமார் அவர்களுக்கு வேலை ஆணை வழங்கியதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 9:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 5/2020-21-தச்சை)

---

8) அருப்புக்கோட்டை நகராட்சியில் மின்பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.ரா.விக்னேஷ் என்பவர் தனது குடும்பச்சூழ்நிலை காரணமாக திருநெல்வேலி மாநகராட்சிக்கு பணியிட மாறுதல் கோரியுள்ளார். அன்னாரின் பணியிட மாறுதல் கோரிக்கையினை அனுமதித்து அருப்புக்கோட்டை நகர்மன்ற தீர்மான எண் 1040, நாள் 21.10.2020ன்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது. அன்னார் அருப்புக்கோட்டை நகராட்சியில் மின் பணியாளர் பணியிடத்தில் பணியாற்றி வருகின்றார். திருநெல்வேலி மாநகராட்சிக்கு அரசாணை எண் 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.5.1998ன்படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் மின்பணியாளர் என்ற பணியிடம் இல்லை. மின்பணியாளர் பணியிடத்திற்கு 7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி அடிப்படை ஊதியம் Pay Matrix Level -8 (19500-62000) என அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையாளர் கடித எண் 4702/2020/சி1, நாள் 04.02.2021-ன் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாநகராட்சியில் மேற்கண்ட ஊதிய நிரக்கின் கீழ் செயல்திறன் பணியாளர் நிலை 2 என்ற பணியிடம் வருகின்றது. செயல்திறன் பணியாளர் நிலை -2 பணியிடத்திற்கு அனுமதிக்கப்பட்ட 50 பணியிடங்களில், நாளது தேதியில் 32 பணியிடங்கள் காலியாக உள்ளது. எனவே காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையினை கருத்திற்கொண்டு திரு.ரா.விக்னேஷ் என்பவரின் பணியிட மாறுதல் கோரிக்கையினை ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலககுறிப்பு

திரு.ரா.விக்னேஷ் மின்பணியாளர் அருப்புக்கோட்டை நகராட்சி என்பவரின் கோரிக்கையின்படி திருநெல்வேலி மாநகராட்சியில் மின் பணியாளர் பணியிடத்திற்கு இணையான பணியிடமான செயல்திறன் பணியாளர் நிலை 2 பணியிடத்தில் தற்போது திருநெல்வேலி மாநகராட்சியில் மேற்குறிப்பிட்ட பணியிடத்தில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு இளையவராக வைக்கப்படுவார் என்ற நிபந்தனையுடன் அன்னாரை, அரசின் அனுமதி ஆணை பெற்று திருநெல்வேலி மாநகராட்சியில் ஈர்த்துக் கொள்ள இசைவு அளித்து மாமன்றம் தீர்மானிக்கலாம்.

தீர்மானம் எண் 10:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் சி1/5434/2020)

---

9) திருநெல்வேலி மாநகராட்சியில் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வகைக்கு ரூ.200/- கட்டணமாக பொதுமக்களால் செலுத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. அதே போல் பிறப்பு / இறப்பு பதிவின்மை சான்று கோட்டாட்சியர் மூலம் வழங்க தாமத பதிவு கட்டணம்

ரூ.500/- பொதுமக்களால் செலுத்தப்பட்டு மேற்படி பதிவின்மை சான்றுகள் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் மேற்படி சான்றுகளை பெற மாநகராட்சி அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தருவதை தவிர்த்து அவர்களுக்கான சிரமத்தை குறைக்கவும், தற்போது கொரோனா தொற்று பரவி வருவதை கருத்திற்கொண்டும் பிறப்பு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் மற்றும் பிறப்பு / இறப்பு பதிவின்மை சான்றுகளை பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும் இவ்வகைக்கான செலவினத்திற்கு ஏற்கனவே பெறப்படும் கட்டணத்துடன் சேர்த்து கூடுதலாக ரூ.30/- (ரூபாய் முப்பது மட்டும்) வசூலிக்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு:

பொதுமக்கள் பிறப்பு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் மற்றும் பிறப்பு / இறப்பு பதிவின்மை சான்றுகளை பெற மாநகராட்சி அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தருவதை தவிர்த்து அவர்களுக்கான சிரமத்தை குறைக்கவும், தற்போது கொரோனா தொற்று பரவி வருவதை கருத்திற்கொண்டும் பிறப்பு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் மற்றும் பிறப்பு / இறப்பு பதிவின்மை சான்றுகளை பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும் இவ்வகைக்கான செலவினத்திற்கு ஏற்கனவே பெறப்படும் கட்டணத்துடன் சேர்த்து கூடுதலாக ரூ.30/- (ரூபாய் முப்பது மட்டும்) வசூலிக்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 11:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் H7/1859/2021 மை.அ)

---

10) திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் தேசிய நிதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.52.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 01.04.2007 முதல் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கான பாதாள சாக்கடை பம்பிங் மெயின் 12.55 கிலோ மீட்டர், கழிவுநீர் குழாய்கள் 40 கிலோ மீட்டர் , கழிவு நீர் உந்து குழாய்கள் நான்கு எண்ணம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று, ஆள் இறங்கு குழிகள் 7924 எண்ணங்கள் ஆகியவற்றினை இயக்கி பராமரிக்கும் பணிகளை 01.12.2020 முதல் 31.03.2021 நான்கு மாத காலத்திற்கு ரூ.49.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, திரு.செல்வம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மாமன்றத் தீர்மானம் எண் 179, நாள் 30.11.2020-ன்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு, அன்னாருக்கு வேலை ஆணை 30.11.2020 அன்று வழங்கப்பட்டு பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்படி பராமரிப்பிற்கான காலம் 31.03.2021-ல் முடிவடைய இருப்பதால், மேற்படி பராமரிப்பு பணிகளை 01.04.2021 முதல் 31.07.2021 முடிய உள்ள நான்கு மாத காலத்திற்கு மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.49.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்டுள்ளவாறு, இம்மாநகராட்சியில் பாதாள சாக்கடை பம்பிங் மெயின் 12.55 கிலோ மீட்டர், கழிவுநீர் குழாய்கள் 40 கிலோ மீட்டர், கழிவு நீர் உந்து குழாய்கள் நான்கு எண்ணம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று, ஆள் இறங்கு குழிகள் 7924 எண்ணங்கள் ஆகியவற்றினை இயக்கி பராமரிக்கும் பணியினை மதிப்பீடு ரூ.49.80 இலட்சம் மதிப்பீட்டில், மாமன்றத் தீர்மானம் எண் 179, நாள் 30.11.2020-ன்படி தனியார் மூலம் பராமரிக்கப்பட்டும், மேற்படி பராமரிப்பு பணிக்கான காலம் 31.03.2021-ல் முடிவடைய இருப்பதாலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2021 முதல் 31.07.2021 முடிய நான்கு மாத காலத்திற்கு பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.49.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், மேற்படி பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 12:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(மதிப்பீடு எண்.57/2020-21)

---

11) திருநெல்வேலி மாநகராட்சி, மைய அலுவலகத்தில் பொதுமக்கள் சேவை மையம் (Call Centre) 01.12.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மையத்தில் திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாநகராட்சியின் சேவைகள் தொடர்பான புகார்கள் 1800 425 4656 என்ற Toll Free எண் மூலம் பெறப்பட்டு கணினியில் பதிவு செய்யப்பட்டு நான்கு மண்டல அலுவலகங்களுக்கும் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கும் (குடிநீர், பொதுசுகாதாரம், தெருவிளக்குகள் மற்றும் மாநகராட்சி சேவை தொடர்பான இதர புகார்கள்) அனுப்பப்பட்டு மேற்படி புகார்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் பெறப்படுகின்றது.

மேலும், புகார் செய்தவுடன் புகார் அளித்தவருக்கும் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலருக்கும் SMS அனுப்பும் வசதி, புகாரை Complaint ID மூலம் Open செய்து புகாரின் தற்போதைய நிலை (status) அறிந்து கொள்ளும் வசதி, புகார் செய்தவரின் அலைபேசி எண்ணைக்கொண்டு அவர் கொடுத்த புகார் அனைத்தையும் பார்க்கும் வசதி, மண்டலம் வாரியாக, வார்டு வாரியாக, இனங்கள் வாரியாக அலுவலர்கள் வாரியாக Excel Format-ல் PDF-ல் அறிக்கை எடுக்கும் வசதி போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்ட விபரத்தினை சம்பந்தப்பட்ட புகார்தாரருக்கு தெரிவித்து, புகார்தாரர்கள் தெரிவிக்கும் பதிலின் அடிப்படையில் கணினியில் மேற்கண்ட புகார்கள் முடிவு செய்யப்படுகிறது. இப்பணி மாமன்றத் தீர்மானம் எண் 55, நாள் 08.06.2020-ன் படி 01.06.2020 முதல் 31.05.2021 வரையுள்ள ஓராண்டு காலத்திற்கு அண்ணா பல்கலைக் கழகம், திருநெல்வேலி நிறுவனத்துடன் ரூ.6,53,400/- மற்றும் 18% சேவை வரி என்ற தொகைக்கு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி ஓராண்டு ஒப்பந்த காலம் 31.05.2021 உடன் முடிவடைய உள்ள நிலையில், இப் பணியினை தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதை முன்னிட்டும், கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தீவிரமாக உள்ளதை கருத்திற்கொண்டும், 01.06.2021 முதல் 31.05.2022 வரை மேலும் ஓராண்டு காலத்திற்கு தற்போதுள்ள அதே ஆண்டுக்கட்டணம் ரூ.6,53,400/- மற்றும் 18% சேவை வரி தொகைக்கு மெசர்ஸ் அண்ணா பல்லைக் கழகம் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் நீட்டித்து வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) மேற்படி Toll Free சேவை மூலம், பொதுமக்கள் மாநகராட்சி தொடர்பான தங்களுக்கான குறைபாடுகளை தொலைபேசி மூலம் அவ்வப்போது இலவசமாக பதிவு செய்து குறைபாடுகள் நிவர்த்தி செய்யப் பெறுவதால் மேற்படி சேவையை தொடரவும், அண்ணா பல்பலைக்கழகம், சென்னை மூலம் 01.06.2021 முதல் 31.05.2022 வரையிலான ஓராண்டு காலத்திற்கு ஆண்டுக்கட்டணம் ரூ. 6,53,400/- மற்றும் 18% சேவை வரி தொகைக்கு ஒப்பந்தம் நீட்டித்து வழங்கவும், மாமன்றம் முடிவு செய்யலாம்.

ஆ) தற்பொழுது கொரோனா தொற்று அதிகமாக இருப்பது மற்றும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2021-க்கான நடத்தை விதிகள் அமுலில் உள்ளது உள்ளிட்ட காரணங்களினால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாததாலும், அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு மேற்படி பணியினை 01.06.2021 முதல் அண்ணா பல்கலைக்கழகம், சென்னைக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 13:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண். இடிபி / 10452 /2008)

---

12) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் முன்னாள் இராணுவத்தினர் கழகம் மூலம் நியமிக்கப்பட்டு ஒப்பந்த பணியாளர்கள் பேருந்து நிலைய பாதுகாப்புபணி, பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணி, பேருந்து நிலையத்தில் வாகன காப்பகத்தில் வசூல் செய்யும் பணி, ஆம்னி பேருந்து நிலையத்தில் வசூல் செய்யும் பணி, மற்றும் சிறுநீர் கழித்தல் புகை பிடித்தல் நிமித்தம் அபராதம் வசூல் செய்யும் பணி ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி ஒப்பந்த பணியாளர்களில் மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் பணிபுரிந்து வரும் முன்னாள் இராணுவத்தினர் 25 பணியாளர்கள் மற்றும் ஆம்னி பேருந்து நிலையத்தில் 3 பணியாளர்கள் ஆக மொத்தம் 28 பணியாளர்களுக்கு மாமன்ற தீர்மானம் எண் 56, நாள் 08-06-2020 -இன் படி 01-04-2020 முதல் 31-03-2021 வரை பணியில் அமர்த்திக்கொள்ள மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணியாளர்களுக்கு 01-04-2020 முதல் அகவிலைப்படியுடன் கூடிய ஊதியம் தலைமை காவலர் மற்றும் இளநிலை உதவியாளர் நிலையில் ரூ.22003/-, பாதுகாவலர் நிலையில் ரூ.19239/- வழங்க மாமன்ற தீர்மானம் எண் 204, நாள்: 30-12--2020-ன்படி மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி 28 டெக்ஸ்கோ பணியாளர்கள் கீழக்கண்டவாறு பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண் | பதவியின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை | மாத ஊதியம் |
|---|---|---|---|
| 1 | தலைமை காவலர் | 1 | 22003/- |
| 2 | பாதுகாவலர் | 18 | 19239/- |
| 3 | பாதுகாவலர் வாகன காப்பகம் | 3 | 19239/- |
| 4 | இளநிலை உதவியாளர் நிலையில் முன்னாள் இராணுவத்தினர் | 3 | 22003/- |
| 5 | பாதுகாவலர் ஆம்னி பேருந்து நிலையம் | 3 | 19239/- |

மேற்படி பேருந்து நிலைய பாதுகாப்பு பணி நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணி ஆகியவற்றின் அவசியம் கருதி 01-04-2021 முதல் 31-03-2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு முன்னாள் இராணுவத்தினர் கழகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு பணியாளர்கள் (Security Guard) 24 நபர்களை பணியாற்ற அனுமதித்தும் மாத ஊதியம் ரூ.19239/-, தலைமை காவலர் 1, மற்றும் இளநிலை உதவியாளர் நிலையில் முன்னாள் இராணுவத்தினர் 3 நபர்களை பணியாற்ற அனுமதித்தும். மாத ஊதியம் ரூ.22003/- மற்றும் 12% சேவை கட்டணமும் 18% சேவை வரி (CGST 9% + SGST 9%) எனும் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு மேற்கண்ட 28 பணியாளர்களுக்கான ஊதிய செலவுகளுக்கும் மாமன்ற அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகத்தின் மூலம் பணிபுரிந்து வரும் 28 டெக்ஸ்கோ பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் 01-04-2021 முதல் 31-03-2022 முடிய உள்ள காலத்திற்கு தொடர்ந்து ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற அனுமதிக்கவும், அதற்கான செலவுகளுக்கும், அவ்வப்போது உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் தனிஅலுவலரின் முன்அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 14:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(சி1/1903/2003)

---

13) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட பேட்டை மற்றும் பழைய பேட்டை இணைப்பு சாலை பகுதியில் இலகு ரக வாகனம், கனரக வாகனம், Toras lorry, Trailer Lorry & Container Lorry உள்ளிட்ட சரக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏதுவாக புதிதாக சரக்கு வாகன முனையம் (Truck Terminal) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி முனையத்தின் பாதுகாப்பு பணிக்கென 3 டெக்ஸ்கோ பணியாளர்களை தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்ளவும், கீழ்க்கண்ட விவரப்படியான ஊதிய செலவினங்களுக்கும், மாமன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பதவியின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை | மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|
| 1. | பாதுகாவலர் | 3 | ரூ.19239/- மற்றும் சேவைக் கட்டணம் 12%, சேவை வரி 18% |

அலுவலகக்குறிப்பு:

அ) பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு சரக்கு வாகன முனையத்தின் பாதுகாப்பு பணிக்கென நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகத்தின் 3 பணியாளர்களையும் 01.02.2021 முதல் 31.03.2022 முடிய உள்ள காலத்திற்கு மட்டும் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணியாற்ற அனுமதிக்கவும், அதற்கான ஊதிய செலவுகளுக்கும், அவ்வப்போது அரசால் உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2021-க்கான நடத்தை விதிகள் அமுலில் இருந்ததன் பொருட்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரால் முன் அனுமதி வழங்கப்பட்டமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 15:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(சி3/ 8109/2018)

---

14) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டல மாநகராட்சிப் பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்டமன்றத் தேர்தல் வாக்குச்சாவடி மையங்களின் உட்புறம் ஆணையாளர் அவர்கள் உத்தரவுப்படியும் செயற்பொறியாளர், உதவி ஆணையாளர், உதவிசெயற்பொறியாளர், உதவிப்பொறியாளர்களின் வாக்குச்சாவடி ஆய்வின்படி மேற்படி வாக்குச்சாவடி உட்புறம் எரியாத மின்விளக்குகள் மற்றும் இயங்காத மின்விசிறிகள் புதுப்பிக்கவும், வார்டு 40 பாரதியார் மாநகராட்சிப் பள்ளிக்கூட புதிய வாக்குச்சாவடி எண் 255M ல் வயரிங் அமைப்பு இல்லாததால் புதியதாக வயரிங் பணி செய்து 5 எண்ணம் 20W LED குழல் விளக்குகள் 2 எண்ணம் புதிய மின் விசிறிகள் மற்றும் 3 Pin Plug Board அமைத்துக் கொடுக்கவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி பணி செய்ய உத்தேசத் தொகை ரூ.90,000/-க்கு மாமன்றம் அனுமதிக்காக

மேலும் மேற்குறிப்பிட்ட தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டன அதன் விவரம் வருமாறு

1. M/s.ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் - ரூ.85844.00
2. M/s..Malani Lighting Coming - ரூ.90452.00
3. M/s..Mahaveer electrical - ரூ.94767.00

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.Sha Jeganlal jeyanthilal Jain நிறுவனத்தார் கொடுத்துள்ள Rs.85844/- ஏற்று தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி Section 15ன் கீழ் செய்ய மாமன்றம் அனுமதிக்காக

அலுவலககுறிப்பு:

தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டல மாநகராட்சிப் பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்டமன்றத் தேர்தல் வாக்குச்சாவடி மையங்களின் உட்புறம் தேவையான மின்வசதிகள் பணி செய்ய உத்தேசத் தொகை ரூ.90,000/-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.Sha Jeganlal jeyanthilal Jain நிறுவனத்தார் கொடுத்துள்ள Rs.85844/- ஏற்று தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி Section 15ன் கீழ் செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 16:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

15) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி பகுதிக்குட்பட்ட பேட்டை பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அலகு அலுவலகம் ஆகியவை திருநெல்வேலி சட்டமன்ற தொகுதிக்குரிய வாக்கு சாவடிகளாக தேர்வு செய்யப்பட்ட இடங்களில் வாக்காளர் உபயோகப்படுத்துவதற்கு Ramp வசதிகள் உடனடியாக அமைக்க தெரிவித்து திருநெல்வேலி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வட்டாச்சியர் அவர்கள் கேட்டுக் கொண்டதின்படி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி மேற்படி KOP மாநகராட்சி பள்ளி, KOP ICDS ரகுமான்பேட்டை, அலகு அலுவலகம் ஆகியவற்றில் Ramp வசதிகள் மற்றும் KOP பள்ளியில் புதியதாக தெரிவிக்கப்பட்டுள்ள வாக்குசாவடி சுற்றிலும் சுவர் கட்டி அந்த வாக்குசாவடிக்கு தேவையான மின் வசதிகள் செய்து கொடுக்க உரிய மதிப்பீடு ரூ.63000/- மாமன்ற அனுமதிக்காக

மேலும் மேற்காணும் தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி மூன்று எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் வருமாறு

| | | |
|---|---|---|
| 1.திரு. S.சுடலைமுத்து | = | 0.50% மதிப்பீட்டை விட குறைவு |
| 2.திரு. P.மணிகண்டராஜா | = | 0.30% மதிப்பீட்டை விட குறைவு |
| 3.திரு.M.தனபால் | = | 0.20% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான (0.50% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.S.சுடலைமுத்து என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக வேலை ஆணை வழங்கி பணி செய்ய உரிய தொகை வழங்க மாநகராட்சி விதிகள் Sec-15 கீழ் செய்ய மாமன்ற அனுமதிக்காக

அலுவலககுறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலப் பகுதிக்குட்பட்ட திருநெல்வேலி தொகுதிக்குட்பட்ட KOP மாநகராட்சி பள்ளி, KOP ICDS ரகுமான்பேட்டை, அலகு அலுவலகம் ஆகியவற்றில் Ramp வசதிகள் மற்றும் KOP பள்ளியில் புதியதாக தெரிவிக்கப்பட்டுள்ள வாக்குசாவடி சுற்றிலும் சுவர் கட்டி அந்த வாக்குசாவடிக்கு தேவையான மின் வசதிகள் செய்து கொடுக்க உரிய மதிப்பீடு ரூ.63000/- மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் குறைவான (0.50% மதிப்பீட்டை விட குறைவு) ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.S.சுடலைமுத்து என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக வேலை ஆணை வழங்கி பணி செய்து உரிய தொகை வழங்க மாநகராட்சி விதிகள் Sec-15 கீழ் செய்ய மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 17:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

16) இம்மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத் திட்டத்தின் கீழ் (NUHM) Public Health Manager – 1No, Statistical Assistant – 1No, Assistant Accounts Officer – 1No, Data Entry Operators – 2 Nos, Pharmasist – 3 Nos, ANM – 11 Nos, Hospital workers – 9 Nos போன்ற 28 எண்ணம் பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் தேர்ந்தெடுக்கும் பொருட்டு மேற்படி பணியாளர்களை 11 மாத காலத்திற்கு பணியில் அமர்த்திக் கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கான ஊதியம் விபரம் பின்வருமாறு:-

- Public Health Manager : Rs.25000/- Per Month
- Statistical Assistant : Rs.20000/- Per Month
- Assistant Accounts Officer : Rs.12000/- Per Month
- Data Entry Operator : Rs.10000/- Per Month
- Pharmacist : Rs.12000/- Per Month
- ANM : Rs.11000/- Per Month
- Hospital Workers : Rs.5121/- Per Month

மேற்கண்ட பட்டியலில் கண்ட விபரப்படி, தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத் திட்டத்தின் கீழ் (NUHM) மேற்குறிப்பிட்ட ஊதிய அடிப்படையில 28 எண்ணம் பணியாளர்களை 11 மாத காலத்திற்கு வெளிக் கொணர்வு முறையில் பணியமர்த்திக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.37.60 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், அதற்கு ஆகும் செலவினத் தொகையினை NUHM திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்டவாறு தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத் திட்டத்தின் கீழ் (NUHM) Public Health Manager – 1No, Statistical Assistant – 1No, Assistant Accounts Officer – 1No, Data Entry Operators – 2 Nos, Pharmasist – 3 Nos, ANM – 11 Nos, Hospital workers – 9 Nos போன்ற 28 எண்ணம் பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் தேர்ந்தெடுக்கும் பொருட்டு மேற்படி பணியாளர்களை 11 மாத காலத்திற்கு பணியில் அமர்த்திக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.37.60 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகையினை NUHM திட்ட நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 18:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(மதிப்பீடு எண்.60/2020-21)

---

17) திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1632 எண்ணம் அடிபம்புகள் மற்றும் 274 எண்ணம் விசைபம்புகளை பராமரிக்கும் பணியானது தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மாமன்றத் தீர்மானம் எண் 101, நாள் 12.10.2018-ன்படி இரண்டு வருடங்களுக்கு அடிபம்பு பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு திரு.செல்வம் என்பவருக்கு 23.11.2018 அன்று வேலை ஆணை வழங்கப்பட்டு அன்னாரால் அடிபம்புகள் மற்றும் விசைபம்புகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், திரு.செல்வம் ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்தப்பட்ட இரண்டு ஆண்டு கால ஒப்பந்தம் எதிர்வரும் 22.11.2020-ல் முடிவடைகின்றது.

இந்நிலையில் தொடர்ந்து 23.11.2020 முதல் மேலும் ஒரு வருட காலத்திற்கு இப்பணிகளை மேற்கொள்ள தகுதி வாய்ந்த நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும் பொருட்டு

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டியுள்ளது. அதன்படி அடிபம்புகள் மற்றும் விசைபம்புகளை ஓராண்டுக்கு பராமரிக்க ஏற்படும் மதிப்பீடு நடப்பு ஆண்டு செலவினத்தின் அடிப்படையில் வருடத்திற்கு ரூ.48.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மூலம் புதிய நிறுவனத்தை தேர்ந்தெடுக்கவும் மாமன்றத் தீர்மானம் எண் 156, நாள் 10.11.2020ல் ஒப்புதல் வழங்கப்பட்டதின் பேரில் மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 42/2020-21-ன் படி மாவட்ட அளவில் ஜீனியர் குரல் தமிழ் நாளிதழிலும் மற்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 10.12.2020-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 29.12.2020-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் திரு.ஜான் ஜெலஸ்டின் மற்றும் திரு.எஸ்.செல்வம் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | திரு. எஸ்.செல்வம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | திரு.எஸ்.ஜான் ஜெலஸ்டின் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் 1647 எண்ணம் அடிபம்புகள் மற்றும் 515 எண்ணம் விசைபம்புகளில் ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல். | ரூ.47,42,068.80 | ரூ.47,23,353.60 மதிப்பீட்டை விட 0.39% குறைவு | ரூ.47,42,068.80 மதிப்பீட்டு விலை விகிதம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ்.செல்வம என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.47,23,353.60 ஆனது மதிப்பீட்டை விட 0.39% குறைவாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம் என **25.02.2021**-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதின்படி அன்னாரது ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) பொருளில் கண்ட விபரப்படி,திருநெல்வேலி மாநகராட்சியில் 1647 எணணம் அடிபம்புகள் மற்றும் 515 எண்ணம் விசைபம்புகளில் ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு, வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.39% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள (ரூ.47,23,353.60) திரு.எஸ்.செல்வம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம் என 25.02.2021ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு நடவடிக்கைகளில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதின்படி அன்னாருடைய ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 19:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(மதிப்பீடு எண்.22/2020-21)

---

18) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மகாத்மா காந்தி தினசரி சந்தையில் வணிக வளாகம் கட்டும் பணிக்கு ரூ.10.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 13வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண் 7ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 14595/2018/IHSDP-3-3 நாள் 24.12.2020ல் ரூ.10.22 கோடிக்கு

நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5876/2020/DO1 நாள் 30.12.2020ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 08/2020-21/SCM -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழில் 24.12.2020 அன்றும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 31.12.2020 அன்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 27.01.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பின்னர் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 26.02.2021 வரை நீட்டிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் (1) M/s.GV Constructions, Namakkal மற்றும் (2) M/s.Sai Construction, Dharmapuri ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அன்றைய தினம் மாலையில் தமிழக சட்டப் பேரவை தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலுக்கு வந்தப்படியால் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் தேர்தல் நன்னடத்தை விதிகள் தளர்வுக்கு பின்னர் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 05.05.2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் M/s.Sai Construction, Dharmapuri ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்ப்நதப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 07.05.2021ன்படி M/s.Sai Construction, Dharmapuri நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை மட்டும் 11.05.2021ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மகாத்மா காந்தி தினசரி சந்தையில் வணிக வளாகம் கட்டும் பணிகள் செய்தல் | ரூ.8,22,70,245/- | ரூ.9,11,05,736/- |
| | | | 10.74% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.9,11,05,736/- ஆனது மதிப்பீட்டை விட 10.74% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 11.05.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 17.05.2021-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 10.74% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டைவிட 7.50% (ரூ.8,84,40,513/-) அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.8,84,40,513/- ஆனது மதிப்பீட்டை விட 7.50% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 17.05.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 24.05.2021-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று மதிப்பீட்டை விட 7.50% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். தற்போது மேற்படி பணிக்கு தேவையான பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை

ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 24.05.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் இறுதியான விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.8,63,42,622/- ஆனது மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மகாத்மா காந்தி தினசரி சந்தையில் வணிக வளாகம் கட்டும் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 24.05.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் இறுதியான விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின்வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.8,63,42,622/- ஆனது மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1022.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 20:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண் 8/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2020-21/SCM)

---

19) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மண்டலம் மகாத்மா காந்தி காய்கனி சந்தையில் அபிவிருத்தி செய்தல் பணிக்கு ரூ.14.92 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 13 வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.5ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3-1 நாள் 24.12.2020ல் ரூ.14.92 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 5876/2020/DO1 நாள் 30.12.2020ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 08/2020-21/SCM -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழில் 24.12.2020 அன்றும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 31.12.2020 அன்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 27.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. அதன்பின்னர் இரண்டாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 10/2020-21-ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழில் 04.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 10.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பின்னர் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 26.02.2021 வரை நீட்டிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் (1) M/s.GV Constructions, Namakkal மற்றும் (2) M/s.Sai Construction, Dharmapuri ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அன்றைய தினம் மாலையில் தமிழக சட்டப் பேரவை தேர்தல் நன்னடத்தை

விதிகள் அமலுக்கு வந்தப்படியால் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் தேர்தல் நன்னடத்தை விதிகள் தளர்வுக்கு பின்னர் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 05.05.2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் M/s.Sai Construction, Dharmapuri ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்பநதப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 07.05.2021ன்படி M/s.Sai Construction, Dharmapuri நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை மட்டும் 11.05.2021ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மண்டலம் மகாத்மா காந்தி காய்கனி சந்தையில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | ரூ.14,18,26,209/- | ரூ.15,60,58,450/- |
| | | | 10.03% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,60,58,450/- ஆனது மதிப்பீட்டை விட 10.03% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 11.05.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 17.05.2021-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 10.03% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 6.73% (ரூ.15,13,71,113/-) அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.15,13,71,113/-ஆனது மதிப்பீட்டை விட 6.73% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 17.05.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 24.05.2021-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று மதிப்பீட்டை விட 6.72% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% (ரூ.14,88,46,606/-) அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். தற்போது மேற்படி பணிக்கு தேவையான பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 24.05.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் இறுதியான விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.14,88,46,606/- ஆனது மதிப்பீட்டை

விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மண்டலம் மகாத்மா காந்தி காய்கனி சந்தையில் அபிவிருத்தி செய்தல பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 24.05.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் இறுதியான விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.14,88,46,606/- ஆனது மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1492.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 21:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 10/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2020-21/SCM)

---

20) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மகாத்மா காந்தி தினசரி சந்தையினை மேம்படுத்தும் பணிக்கு ரூ.14.90 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 13 வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.6ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3-2 நாள் 24.12.2020ல் ரூ.14.90 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5876/2020/DO1 நாள் 30.12.2020ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 08/2020-21/SCM -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழில் 24.12.2020 அன்றும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 31.12.2020 அன்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 27.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. அதன்பின்னர் இரண்டாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 10/2020-21 -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழில் 04.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 10.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பின்னர் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 26.02.2021 வரை நீட்டிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் (1) M/s.GV Constructions, Namakkal மற்றும் (2) M/s.Sai Construction, Dharmapuri ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அன்றைய தினம் மாலையில் தமிழக சட்டப் பேரவை தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலுக்கு வந்தப்படியால் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் தேர்தல் நன்னடத்தை விதிகள் தளர்வுக்கு பின்னர் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 05.05.2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் M/s.Sai Construction, Dharmapuri ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்ப்நதப்புள்ளி

கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 07.05.2021ன்படி M/s.Sai Construction, Dharmapuri நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை மட்டும் 11.05.2021ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மகாத்மா காந்தி தினசரி சந்தையினை மேம்படுத்தும் பணிகள் செய்தல் | ரூ.14,19,82,667/- | ரூ.15,62,03,131/- |
| | | | 10.02% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,62,03,131/- ஆனது மதிப்பீட்டை விட 10.02% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 11.05.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 17.05.2021-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 10.02% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 6.72% (ரூ.15,15,23,902/-) அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.15,15,23,902/- ஆனது மதிப்பீட்டை விட 6.72% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 17.05.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 24.05.2021-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று மதிப்பீட்டை விட 6.72% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.94% (ரூ.14,89,96,610/-) அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். தற்போது மேற்படி பணிக்கு தேவையான பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 24.05.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் இறுதியான விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.14,89,96,610/- ஆனது மதிப்பீட்டை விட 4.94% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மகாத்மா காந்தி தினசரி சந்தையினை மேம்படுத்தும் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட

மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 24.05.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.GV Constructions, Namakkal நிறுவனத்தின் இறுதியான விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.14,89,96,610/- ஆனது மதிப்பீட்டை விட 4.94% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1490.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 22:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 10/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2020-21/SCM)

---